O.S. No: 170/2018
பெயர்: கார்த்திகேயன்
**வா.சா. 3**
21-01-2026
**குறுக்கு விசாரணை**

நான் கார் உதிரி பாகங்களை விற்கும் தொழில் செய்து வருகிறேன் . 17 வருடங்களாக அந்த தொழில் செய்து வருகிறேன் . ஆடுதுறையில் மெடிக்கல் ஷாப் வைத்திருக்கிறேன். நான் யாருக்கும் கடன் கொடுக்கும் தொழில் செய்யவில்லை . நான் யாருக்கும் கடன் கொடுத்ததில்லை . நாங்கள் 3 சகோதரர்கள். மோகனசுந்தரம், ரமேஷ் மற்றும் நான். ரமேஷ் விவசாயம் செய்து வருகிறார் . அதை தவிர வேறு தொழில் அவருக்கு இல்லை. மோகனசுந்தரம் சீட்டு கம்பெனி வைத்திருக்கிறார் . அதை தவிர அவருக்கு வேறு தொழில் இல்லை. சீட்டு கம்பெனி மூலமாக அவர் பணம் கடன் கொடுப்பாரா என்றால் அவருக்கு தான் தெரியும் . 09/06/2010 இல் கமால் பாட்சா என்பவரிடம் நான் ஒரு கடன் பத்திரம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் ஆமாம் . இந்த கடன் 08/07/2014 இல் ஒரு வரவு ரசீது பதிவு செய்து கொடுத்திருக்கிறேன் என்றால் ஆமாம் . அடமானம் வைத்த சொத்து மற்றும் வரவு வைத்த சொத்து இரண்டும் ஒன்று தான் என்றால் சரி. அடமான பத்திரத்தின் கணினி நகல் **பி.சா.ஆ.2 ஆகும்**. வரவு ரசீது கணினி நகல் **பி.சா.ஆ. 3 ஆகும்.** 08/07/2014 அன்று பி.சாஆ. 3 படி வரவு ரசீது ஏற்பட்ட அதே சொத்தை, மறுநாள் 09/07/2014 அன்று என் அண்ணன் பெயருக்கு கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்றால் சரி. நான் வருமான வரி கடை ஆரம்பித்ததில் இருந்து செலுத்தி வருகிறேன். வருமான வரியில் உண்மையான வரவு செலவு தான் காட்டி வருகிறேன். பிரதிவாதிக்கு 04/11/2011 இல் நான் ரூபாய் 5 லட்சம் கொடுத்தேன். இந்த 5 லட்சம் பணத்தை நான் வருமான வரி கணக்கில்

காண்பிக்கவில்லை. 5 லட்சம் கொடுத்த இரண்டு, மூன்று நாட்கள் கழித்து 04/11/2011 அன்று நான் கிரைய ஒப்பந்தம் செய்துக்கொண்டேன். பணம் கொடுத்த தேதி சரியாக ஞாபகமில்லை. பணம் கொடுத்தது வருமான வரி கணக்குகளில் இல்லை. மீண்டும் 2013 இல் 9 வது மாதம் 1 லட்சம் பணம் கொடுத்து வரவு வைத்துக்கொண்டேன். தேதி ஞாபகமில்லை. 2013 இல் 1 லட்சம் கொடுத்தையும் வருமான வரி கணக்கில் காண்பிக்கவில்லை. எனக்கு பிரமாண வாக்குமூலத்திலுள்ள விவரங்கள் தெரியுமா என்றால் ஒப்பந்தப்படி பதிவு செய்யச்சொல்லி தான் குறிப்பிட்டுள்ளேன். நான் பிரதிவாதி 2018 இல் விற்க முயற்சி செய்வதை தெரிந்து அனுப்பிய அறிவிப்பை தாக்கல் செய்தேன். என்னை மறு தேதி போட்டு இன்று தான் விசாரிக்கிறார்கள். என்னை முதன் முதலாக 3 மாதங்களுக்கு முன்பு விசாரித்தார்கள். தேதி நினைவில்லை. என்னை விசாரித்த போது நீதிமன்றத்தில் என்ன ஆவணம் தாக்கல் செய்தேன் என்று எனக்கு நினைவில்லை. பிரதிவாதியின் கணவரை தான் தெரியும். 15 வருடங்களாக தெரியும். எனக்கும் பிரதிவாதி மற்றும் பிரதிவாதியின் கணவருக்கும் இடையே வேறு எந்த வரவு செலவும் கிடையாது. நானும் என்னுடைய சகோதரர்கள் பிரதிவாதி மீது வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் எனக்கும் பிரதிவாதிக்கும் இந்த ஒரு வரவு செலவு தான். பிரதிவாதி கும்பகோணம் ஸ்ரீநகர் காலனியில் வசித்து வருகிறார். பிரதிவாதி வசித்து வரும் வீடு அவருக்கு சொந்தமானதா என்று தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் கிரைய ஒப்பந்தத்தில் என்னுடைய சகோதரர் ரமேஷ் என்பவருக்கும் பிரதிவாதி மற்றும் அவருடைய கணவருக்கும் இடையே கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டதாக உள்ளதா என்றால் இந்த ஆவணத்தில் அவ்வாறு உள்ளது. எனக்கு நேரடியாக தெரியாது. நானும் பிரதிவாதியும் கிரைய ஒப்பந்தம்

செய்துக்கொண்ட போது 2011 இல் காலம் 1 வருடம் என்று நிர்ணயம் செய்தோம். பிரமாண வாக்குமூலத்திற்கு விவரம் வக்கிலிடம் நான் சொல்லி அவர் டைப் செய்தார் . அந்த பிரமாண வாக்குமூலத்தில் ஒப்பந்தத்தின் படி காலக்கெடு என்பது முக்கிய ஷரத்தாக எங்களால் கருதப்படவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம் . அறிவிப்பில் என்ன விவரம் சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆனால் அதிலுள்ள விவரங்களை நான் தான் சொன்னேன் . நான் மீதத்தொகையை கொடுத்து பத்திரம் பதிவு செய்துக்கொள்ள தயாராக இருந்த போதிலும் பிரதிவாதி ஏதோ ஒரு காரணம் சொல்லி காலம் கடத்திவந்தார் என்றும் கால நீட்டிப்பு பிரதிவாதியின் செயலால் ஏற்பட்டது என்று பிரமாண வாக்குமூலத்தில் சொன்ன விவரங்களை நான் அனுப்பிய அறிவிப்பில் மற்றும் பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. கிரைய ஒப்பந்தம் 2011 இல் ஏற்பட்ட பிறகு 2013 இல் வரவு ரசீது ஏற்பட்டது . வா.சா.ஆ.1 இல் 04/11/2011 முதல் 03/11/2012 ற்குள் கிரைய சாசனம் செய்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம் . வரவு ரசீது வா .சா.ஆ. 2 ஏற்பட்டது 05/09/2013 என்றால் ஆமாம் . 04/11/2011 முதல் 03/11/2012 ற்குள் நான் கிரைய செய்துக்கொள்ள தயாராக இருக்கிறேன் என்று பிரதிவாதிக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் நேரில் தான் கேட்டேன் . அறிவிப்பு அனுப்பவில்லை. தேதி ஞாபகமில்லை . கடைக்கு வரும்போதெல்லாம் கேட்பேன். 03/11/2012 இல் இருந்து 05/09/2013 ற்குள் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை . 05/09/2013 இல் இருந்து 05/12/2018 இல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும் வரை இடைப்பட்ட காலத்தில் நான் கிரையம் செய்துக்கொள்ள தயாராக இருக்கிறேன் என்று கடிதமோ, அறிவிப்போ அனுப்பவில்லை. நேரில் பிரதிவாதியின் கணவர்

கடைக்கு வரும் போதும் கேட்டதும் , வீட்டிற்கு போய் பிரதிவாதியிடமும் கேட்டது தான். இவ்வாறு ஆரிப்பிடம் கடையிலும் , சம்சாத் பேகத்திடம் வீட்டில் போய் கேட்ட விவரத்தை அறிவிப்பில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. 15/07/2013 அன்று நான் முகமது ஆரிப்பிடம் இருந்து சிதம்பரத்தில் உள்ள இரண்டு பிளாட்டுக்களை கிரையம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் ஆமாம் . அந்த கிரைய ஆவணத்தின் ஜெராக்ஸ் நகல் **பி.சா.ஆ. 4 ஆகும்.** 03/12/2018 இல் பிரதிவாதி தாவா சொத்தை வேறு நபருக்கு விற்க முயற்சி செய்ததால் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதா பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ. 3 வழக்கறிஞர் அறிவிப்பு 05/12/2018 இல் அனுப்பியுள்ளேன் என்றால் ஆமாம். அதில், 03/12/2018 இல் தாவா சொத்தை பிரதிவாதி விற்க முயற்சி செய்த விவரத்தை அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் நான் வழக்கறிஞரிடம் விவரம் சொன்னேன். வழக்கறிஞர் அறிவிப்பில் அந்த விவரம் இல்லை என்றால் சரி. வா.சா.ஆ.8 பிரதிவாதியின் வழக்கறிஞரால் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 9 இல் பிரதிவாதியின் வழக்கறிஞரால் கையொப்பம் இடப்படவில்லை என்றால் சரியல்ல . வா.சா.ஆ.2 இல் வாசகங்கள் நானும் பிரதிவாதியும் ஒப்புக்கொண்டதாக தான் உள்ளது என்றால் சரி. அதில் என் கையெழுத்து இல்லை . வா.சா.ஆ.2 யை முழுவதுமாக பார்த்து தன் கையெழுத்து இல்லை என்று சொல்கிறார் . 2018 வரை கால நீட்டிப்பு செய்து யார் கையெழுத்து போட்டிருக்கிறார் என்றால் சம்சாத் பேகமும் நானும் போட்டிருக்கிறேன் . நானும், சம்சாத் பேகமும் கால நீட்டிப்பு செய்து இருவரும் கையெழுத்து போட்ட ஆவணத்தை தாக்கல் செய்திருக்கிறேன் . கால நீட்டிப்பை ஒப்புக்கொண்டதாக கடிதமோ அறிவிப்போ மீண்டும் அனுப்பவில்லை.

நான் பிரதிவாதி எந்த காலத்திலும் ரூபாய் 5 லட்சமோ, ரூபாய் 1 லட்சமோ பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல . நான் மற்றும் என் சகோதரர்கள் இருவரும்சேர்ந்து தான் கடன் கொடுக்கும் தொழிலை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் கணவருக்கு என் அண்ணன் மற்றும் நான் கொடுத்த கடனுக்காக பல வெற்று பத்திரம் மற்றும் புரோ நோட்டுகள் , காசோலைகளில் கையெழுத்து வாங்கி வைத்திருந்தோம் என்றால் சரியல்ல. நானும் என் சகோதரர்களும் நடத்தி வரும் நிறுவனத்தில் பிரதிவாதியின் கணவர் பல வருடங்களாக பணம் கொடுத்து வாங்கி வருகிறார் என்றால் அவருடைய வரவு செலவு எனக்கு தெரியாது. மேற்கொண்டு பணம் கொடுக்க வேண்டுமென்றால் வாதி பெயரில், பிரதிவாதியும் அவருடைய கணவரும் ஒரு பதிவு ஆவணம் எழுதிக்கொடுக்க வேண்டும் என்று நானும் என் சகோதரர்களும் பிரதிவாதியின் கணவரை கட்டாயப்படுத்தினோம் என்றால் சரியல்ல . வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 இல் உள்ள விவரங்கள் தெரியாமலேயே பிரதிவாதி மற்றும் அவருடைய கணவரிடம் கையெழுத்து வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, வா.சா.ஆ 2 இல் உள்ள விவரங்கள் நாங்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பின்னர் தான் பிரதிவாதிக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல . எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே எந்த காலத்திலும் கிரைய ஒப்பந்தமோ கால நீட்டிப்பு பத்திரமோ ஏற்பட்டதில்லை என்றால் சரியல்ல . நான் பிரதிவாதி மீது எங்கள் நிறுவனத்திற்கு சேரவேண்டிய கடன் பாக்கிற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல . நான் வழக்கில் கோரியுள்ள எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல . வழக்கிற்கான வழக்கு மூலம் பொய்யானது என்றால் சரியல்ல. நான் எந்த காலத்திலும் பிரதிவாதியிடம் கிரைய செய்துக்கொடுக்க கேட்டதில்லை

என்றால் சரியல்ல. பிரதிவாதி மீது என் அண்ணன் சொல் படி பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.